அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். எந்தெந்தக் கல்லூரிகளுக்கு அவசியமாகத் தேவைப்படுகிறதோ, அந்தக் கல்லூரிகளுக்கெல்லாம் கட்டடங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். நிச்சயமாக உங்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

மரக் கன்றுகள் நடுதல்

***12908—திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதிக்குள் செல்லும் நெடுஞ்சாலைத் துறையின் சாலையோரங்களில் மரக் கன்றுகளை நடவும், பராமரிக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதியைப் பொறுத்தளவில், மாநில நெடுஞ்சாலைகள் 33 கி.மீ., மாவட்ட முக்கியச் சாலைகள் 115 கி.மீ., இதர மாவட்ட சாலைகள் 279 கி.மீ., கரும்பு அபிவிருத்தித் திட்ட சாலைகள் 11 கி.மீ., ஆக மொத்தம் 438 கி.மீ. சாலைகள் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்தச் சாலைகளில் ஏற்கெனவே 2 ஆயிரத்து 50 மரங்கள் உள்ளன. மேலும், இந்த இரண்டாண்டுக் காலத்தில் 2 ஆயிரத்து 762 மரக் கன்றுகள் நடப்பட்டு, நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மொத்தமாக 40 ஆயிரத்து 700 மரங்கள் துறையின் சார்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 12]

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் என்பது வறட்சியான மாவட்டம். பின்தங்கிய மாவட்டம். வான்மழை பொய்த்துப்போய் இருக்கிற ஒரு மாவட்டம். தொழில் வளர்ச்சி இல்லாத ஒரு பகுதி. இயற்கைச் சூழலும் பாதிப்படைந்திருக்கிற காரணத்தால் மரங்கள் முழுவதும் வெட்டப்பட்டு வெப்ப மண்டலப் பகுதியாக இருக்கிறது. வான்மழை முற்றிலும் பொய்த்துவிட்டது. கந்தர்வகோட்டையிலிருந்து புதுக்கோட்டை செல்லக்கூடிய சாலையின் இருபுறங்களிலும் புளிய மரம், மா மரம் மற்றும் ஆல மரம் என்று நிறைய மரங்கள் இருந்தன. சாலைகள் புதுப்பிக்கப்பட்டதால் அந்த மரங்கள் முழுவதும் வெட்டப்பட்டுவிட்டன. ஆகவே, இப்போது புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வகோட்டைக்கு வரக்கூடிய பகுதியிலும் தொகுதி முழுவதும், மாவட்டம் முழுவதும் மேம்படுத்தப்பட்ட அந்தச் சாலையோரங்களில் மரங்கள் நடுவதற்கும், அந்த மரங்கள் நடுகிற பகுதிகளிலே மரக் கன்றுகளைப் பாதுகாப்பதற்கும் கூடுதல் முயற்சி எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதற்கு ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள் விரிவாக்கப்படுகிறபோது மரங்களை வெட்ட வேண்டிதான் இருக்கிறது. ஆனால், இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே ஒரு மரத்தை வெட்டினால் 10 மரக் கன்றுகளை நட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, சாதாரணமாக 3 அடி, 2 அடி மரக் கன்றுகளை வைக்கிறபோது கால்நடைகளின் மூலமாக அவற்றுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடுகிறது என்பதை உணர்ந்த காரணத்தினால், இப்போது ஆந்திராவில் இருக்கிற ராஜமுந்திரியிலிருந்து வாங்கி வந்து 6 அடிக்கு மேலுள்ள மரக் கன்றுகளை நட வேண்டுமென்று ஓர் ஆணை பிறப்பித்துள்ளதன்*

அடிப்படையில், இந்த 2 ஆண்டுக்காலமாக தொடர்ந்து நாங்கள் சாலையோரங்களிலே மரக் கன்றுகளை நட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கேள்வியை நான் கவனத்தில் எடுத்துக்கொண்டு, துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சொல்லி, விரைந்து அந்த 2 பகுதிகளிலும் மரக் கன்றுகளை நடுவதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. புதுக்கோட்டை மாவட்டத்திலும், கந்தர்வகோட்டையிலும் சாலைகள் மிகப்பெரும் அளவிற்குப் பாதிப்படைந்திருக்கின்றன. 5 ஆண்டுகளுக்கும் மேலாக போடப்படாமல் இருக்கக்கூடிய சாலைகள், RR சாலைகள் குறிப்பாக, இராமுடையான் பட்டியிலிருந்து மின்னாத்தூர் சாலையும், மங்கனூரிலிருந்து கொப்பம்பட்டி சாலையும், அண்டக்குளத்திலிருந்து பெரியதம்பிஉடையான்பட்டி சாலையும் tender விடப்பட்டு போடப்படாமல் நீண்ட நாட்களாகக் கிடப்பிலிருக்கின்றன. பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்டது. மாணவர்கள் பள்ளிக்குக்கூட செல்ல முடியாத ஒரு சூழ்நிலை நிலவுகிறது. 7, 8 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிற அந்தச் சாலைப் பணிகளை (மணியடிக்கப்பெற்றது) நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கந்தர்வகோட்டையிலே ஓர் ஆய்வு மாளிகையை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமுடையான்பட்டியிலிருந்து மின்னாத்தூர் வரையிலே உள்ள 1.6 கிலோ மீட்டர் ஊராட்சி ஒன்றியச் சாலை 2022-2023 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, 1.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பரிசீலனையிலே உள்ளது. அதேபோன்று, மங்கனூரிலேயிருந்து கொப்பம்பட்டி செல்லும்

2023 ஏப்ரல் 12]

சாலை மோசமான நிலையில் உள்ளது என்பதையும், இந்தச் சாலையிலே பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் பள்ளிக்குப் போகிற பிள்ளைகள் போக முடியவில்லை என்பதையும் ஒரே கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் இங்கேதொடுத்தார்கள்.மங்கனூரிலேயிருந்து கொப்பம்பட்டி செல்லும் ஊராட்சிச் சாலையை மாவட்ட இதரச் சாலையாக இரண்டாம் கட்டமாகத் தரமுயர்த்துவதற்காக அரசு இப்போது முன்னெடுப்பாக எடுத்திருக்கிறது. விரைந்து அந்தப் பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, விருந்தினர் மாளிகையைக் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, மாவட்டத் தலைநகரங்களிலே, முக்கியமாக இருக்கிற நகரங்களில்தான் விருந்தினர் மாளிகைகள் பொதுப் பணித் துறையின் மூலமாகக் கட்டப்படுகின்றன. வருங்காலங்களிலே கட்டப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால், நிதிநிலைக்கேற்ப அதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட மாடல் ஆட்சி நடத்துகிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரை, ஒருவழிச் சாலைகள் இருவழிச் சாலைகளாகவும், இருவழிச் சாலைகள் 4 வழிச் சாலைகளாகவும், 4 வழிச் சாலைகள் 6 வழிச் சாலைகளாகவும் அகலப்படுத்தி, விரிவுபடுத்தி, சாலைகளை விஸ்தரிப்பு செய்கிற தருணத்தில் ஆங்காங்கு மரங்கள் வெட்டப்படுகிற நிலை இருக்கிறது. எனவே, வெட்டப்படும் மரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கன்றுகள் எத்தனை நடப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தையும், 1996 ஆம் ஆண்டைய அன்புத் தலைவர் கலைஞருடைய ஆட்சியில் சாலைகளைப் பராமரிக்க, மரங்களைப் பராமரிக்க சாலைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டார்கள். அதேபோல், மாண்புமிகு தளபதியார் அரசு மரங்களையும், சாலைகளையும் பராமரிக்க சாலைப் பணியாளர்களைப் பணியமர்த்தித் தருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

[2023 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள் கேட்ட கேள்வியிலேயே, நான் அதற்குப் பதிலைச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், நம்முடைய கொறடா அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு செய்தியை நான் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களிலே, பல்வேறு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டார்கள். 'நமக்கு நாமே' திட்டத்தின் மூலமாக கன்னியாகுமரியிலிருந்து ஆரம்பித்து சென்னை வரைக்கும் நடைப்பயணம் மேற்கொண்டார்கள். யாரும் செல்லாத அளவிற்கு அவர் சாலைகளில் நடைப்பயணம் மேற்கொண்டவர். அந்த அடிப்படையிலே சொன்னார்கள். இதுபோன்று சாலைகளை விரிவுபடுத்துகிறபோது மரங்கள் வெட்டத்தான் செய்யப்படுகின்றன; ஒரு மரம் வெட்டினால் உடனே அதற்கு 10 மரக் கன்றுகள் நடப்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான், சென்ற இரண்டு ஆண்டுகளிலே, முதலாண்டில் 2 இலட்சம் மரக் கன்றுகளும், (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டிலே 2 இலட்சம் மரக் கன்றுகளும், ஆக 4 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. நான் ஆரம்பத்திலே சொன்னதைப்போல, 3, 4 அடிகளில் tree guard வைக்கிறபோது, அதையும் மீறி, கால்நடைகள் மரக் கன்றுகளைச் சேதப்படுத்துவது அல்லது மேய்ந்து விடுவது என்கிற நிலையை அறிந்த காரணத்தினால்தான், ஆந்திராவில் இருக்கின்ற ராஜமுந்திரிக்குச் சென்று, 6 அடி உயரத்திற்கு மரக் கன்றுகளை வாங்கி, இப்போது துறையின் சார்பில் நடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்; ஜூன் மாதம் 3 ஆம் தேதி, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற எமது அன்புத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை (மேசையைத் தட்டும் ஒலி) முன்னிட்டு 5 இலட்சம் மரக் கன்றுகளை வாங்கி நட வேண்டுமென்று அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, ஜூன் மாதத்திற்குப் பின்னால், இந்த 5 இலட்சம் மரக் கன்றுகளை நம்முடைய அரசுக் கொறடா முனைவர் கோவி.

2023 ஏப்ரல் 12]
செழியன் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, எங்கெங்கெல்லாம் மரங்கள் இல்லாமல் இருக்கின்றனவோ, அங்கெங்கெல்லாம் நெடுஞ்சாலைத் துறை மூலமாக மரக் கன்றுகளை நட்டு, இந்த நாட்டை பசுமையாக ஆக்குவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

மஞ்சள் ஆராய்ச்சி மையம்

***1371—டாக்டர் சி. சரஸ்வதி:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, வடுகபட்டி பகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதி, வடுகபட்டி பகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமது மொடக்குறிச்சி தொகுதியில் மஞ்சள் பயிரானது மிக அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. கடந்த ஆட்சியில் மொடக்குறிச்சி தொகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டு, தனியாரின் ஆக்கிரமிப்பினால் அரசு நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டு திட்டம் கைவிடப்பட்டது. தற்போது, அரசால், மொடக்குறிச்சி தொகுதி,*